முருகப்பெருமான் துணை

**மகான் கஞ்சமலைச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.05.2023**, சனிக்கிழமை

1. ஞானபண்டிதன் அவதாரமே
ஞானியாக வந்த பிரம்மமே
ஞான உலகம் படைக்கவே
ஞானிகளை உருவாக்க வந்த
2. வந்த ஆறுமுக அரங்கனே
வள்ளலே உம்மை போற்றி
சிந்தைபட சோபகிருது தகர்திங்கள்
செப்பிட முப்பான்திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 30 ம் நாள், **13.05.2023**, சனிக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசி
வழங்குவேன் கஞ்சமலைச்சித்தர் யானும்
சோரமில்லா ஞானவான்கள்படை
செகமெங்கும் உருவாக உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கமகானின்
உபதேச வழிகாட்டல் தன்னை
குறைவின்றி மக்கள் ஏற்று
கூடிவந்தால் போதும் மாற்றம்
5. மாற்றம் ஞான பலமாக
மகான்களின் வழிகாட்டலாக
ஆற்றல் அனைவருக்கும் பெருகி
அகிலத்தில் ஞானவான்களாவர்
6. அவனியில் அன்னதான சேவை
அதன்வழி தொண்டு செய்து
அவதார ஞானியரின் கட்டளையாக
அகிலமெங்கும் நிறைவேற்றிவர
7. வருகவே அவரவர் வாழ்விலும்
வல்லமை வள்ளல் தன்மையாக
தருமபலமாக முருகன் அருளாக
தரணியில் சக்தி பெருகியே

8. பெருகியே தெய்வபலம் வழி
பேருலகில் ஞானவான்கள்படை
தருமம் நீதி காக்கும் வண்ணம்
தலைமையை ஞானவழித் தேர்ந்தெடுக்கும்

9. தேர்ந்தெடுக்கும் அறிவு பலமும்
தெளிவு கூடியே ஆசிபட
தேர்ந்தெடுப்பார் ஞானத்தலைமை
தேசிகன் அவதார நோக்கமாக

10. ஆகவே ஞான ஆட்சிபடைத்து
அமைதி பாதுகாப்பு நிறைந்த
யுகமாக ஞானயுகம் படைப்பர்
உலகத்தில் அரங்கன்பால் தீட்சை

11. தீட்சை ஆசிபெற்ற நல்ல
தொண்டர்கட்கே இந்த வாய்ப்பு
ஆட்சி மாற்றம் ஞான ஆட்சி
அனைத்தும் அரங்கனால் நிகழும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—